தமிழ்நாட்டில் பள்ளிப் படிப்பை

இடையில் விடும் மாணவர்கள் இல்லாத நிலை அதிகரிப்பு! மாபெரும் சாதனை!

ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகம் ஆய்வு அறிக்கையில் தகவல்!

சென்னை, ஜன. 3 –

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் காலை உணவுத் திட்டம், திறன் மிகு வகுப்பறைகள் திட்டம் இல்லம் தேடி கல்வி திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம் வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கும் திட்டம் மாற்றுத் திறனாளி மாணவர்கள் மீது தனிக் கவனம் செலுத்தும் திட்டம் முதலிய திட்டங்களால் தமிழ்நாட்டில் பள்ளிப் படிப்பை இடையில் விடும் மாணவர்கள் இல்லாத நிலை ஏற்பட்டு மாபெரும் சாதனை – பீகார், அசாம், இராஜஸ்தான், அரியானா ஆகிய மாநிலங்களில் பள்ளிப் படிப்பை இடையில் விடும் மாணவர்கள் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளது என்று ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகம் ஆய்வுஅறிக்கையில்தகவல்தெரிவித்துள்ளது.

இந்தியா முழுவதும், 2019 ஆம் ஆண்டை விட, 2024 ஆம் ஆண்டில், பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தாமல், நடுநிலைஉயர்நிலை பள்ளிகளில் தொடர்ந்து படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு மாபெரும் சாதனை படைத்துள்ளது.

தமிழ்நாட்டில் பள்ளிப் படிப்பில் குழந்தைகளின் சாதனைகள்

தமிழ்நாட்டில் பள்ளிப்படிப்பைத் தொடங்கிய 100 சிறுவர்களில் நடுநிலைப்பள்ளி முடிப்பை முடித்தவர்கள் 2019ல் 99 பேர் என்பது 2024ல் 100 பேர் எனஉயர்ந்துள்ளது. அதேபோல, சிறுமியர் எண்ணிக்கை, 97.5ல் இருந்து 100 ஆக 2024ல் அதிகரித்து இடையில் படிப்பை விடுவோர் தமிழ்நாட்டில் இல்லை என்பது புலனாகியுள்ளது.

அதேபோல, தமிழ்நாட்டில் மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த மாணவர்கள் 2019ல் 81.3 என இருந்தது 2024ல் 89.2 ஆக உயர்ந்துள்ளது.மாணவிகளைப் பொறுத்தவரை 2019ல் 89.4 சதவிகிதமாக இருந்தது 2024ல் 95.6 சதவிகிதமாக அதிகரித்து

சாதனை படைக்கப்பட்டுள்ளது.

பீகார் மாநிலத்தில் பள்ளிப் படிப்பை இடையில் விட்டோர்

அதேநேரத்தில், பீகார் மாநிலத்தில் பள்ளிப் படிப்பைத் தொடங்கிய 100 மாணவர்களில் நடுநிலைப்பள்ளிப் படிப்பை முடித்தவர்கள் 2019ஆம் ஆண்டில் 78.6 சதவிகிதமாக இருந்தது 2024ல் 65 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. மாணவிகளைப் பொறுத்தவரை 2019ல் 81.1 சதவிகிதமாக இருந்தது 2024ல் 65.4 சதவிகிதமாக குறைந்து பள்ளிப் படிப்பை விட்டவர்கள் எண்ணிக்கை மிக அதிகமாயிற்று.

பீகாரில் மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த மாணவர்கள் எண்ணிக்கை 51.2 சதவிகிதம் என்பது 38.8 சதவிகிதம் என 12.4 சதவிகிதம் குறைந்து இடையில் விடுபவர்கள் எண்ணிக்கை மிக மிக அதிகம் என்பதை வெளிப்படுத்துகிறது. அதேபோல மாணவிகளைப் பொறுத்தவரையிலும், மேல்நிலைப்பள்ளிப் படிப்பில் 2019ல் 51.6 சதவிகிதமாக இருந்தது 2024ல் 9.3 சதவிகிதம் குறைந்து அதாவது 42.3ஆக குறைந்து பள்ளிப் படிப்பை இடையில் விடுபவர்கள் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளது.

அசாம் மாநிலத்தில் பள்ளிப் படிப்பை இடையில் விட்டோர்

அசாம் மாநிலத்தைப் பொறுத்தவரை, பள்ளிப் படிப்பைத் தொடங்கிய 100 மாணவர்களில் நடுநிலைப்பள்ளிப் படிப்பை முடித்தவர்கள் 2019ஆம் ஆண்டில் 93.4 சதவிகிதமாக இருந்தது 2024ல் 82.6 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. மாணவிகளைப் பொறுத்தவரை 2019ல் 96.7 சதவிகிதமாக இருந்தது 2024ல் 88.7 சதவிகிதமாகக் குறைந்து பள்ளிப் படிப்பைவிட்டவர்கள் எண்ணிக்கை மிக அதிகமாயிற்று.

மேல்நிலைப்பள்ளிப் படிப்பைப் பொறுத்தவரை 2019ல் மாணவர்கள் எண்ணிக்கை 62.6 என்பது 2024ல் 57.4 சதவிகிதமாகவும்; மாணவிகள் எண்ணிக்கை 64.6 சதவிகிதம் என்பது 63.7 சதவிகிதமாகவும் குறைந்துவிட்டது.

அரியானா மாநிலத்தில் பள்ளிப் படிப்பை இடையில் விட்டோர்

அரியானா மாநிலத்தை பொறுத்தவரை, பள்ளிப் படிப்பைத் தொடங்கிய 100 மாணவர்களில் நடுநிலைப்பள்ளி படிப்பை முடித்தவர்கள் 2019ஆம் ஆண்டில் 98.3 சதவிகிதம் என்பது2024ல் 93 சதவிகிதமாகவும்; மாணவிகளைப் பொறுத்தவரை 2019ல் 97.7 சதவிகிதம் என்பது 2024ல் 95.6 சதவிகிதமாகவும்



Falling attendance

The figures in the tables are The Hindu's calculations based on data sourced from UDISE+

Table 1: Table shows the number of students out of every 100 who completed upper primary and secondary education in 2024 ('24) and 2019 ('19). Upper primary: Class VI to VIII, Secondary: Class IX and X

• In Kerala, of the 100 boys who started schooling, 99.6 completed upper primary in 2019, which improved further to 100 in 2024

	Upper primary				Secondary			
	Boys		Girls		Boys		Girls	
State	'19	'24	'19	'24	'19	'24	'19	'24
Kerala	99.6	100	100	100	88.3	95.7	93.2	97.5
HP	99.4	99.3	99.2	99.6	90.7	93.5	92.5	95.6
Tamil Nadu	99	100	97.5	100	81.3	89.2	89.4	95.6
Punjab	95.7	98.9	95.8	97.8	82.7	90	86.2	92.8
Uttarakhand	92.2	97.1	93.1	99.1	79.9	88.5	83.6	92.8
Goa	97.7	99	97.4	98.1	85.4	87.8	91.2	92.3
Maharashtra	97.1	99.3	96.3	99.5	83.4	88.3	83.5	90.5
Telangana	95.2	99.9	95.2	100	79.9	86.6	83.6	90.5
Delhi	96.7	99.4	99.2	99.4	82.6	87.8	85.5	90.3
Andhra	96.7	98.4	99.1	99.2	81.2	84.2	83.9	88.6
Odisha	92.2	97.8	91.1	96.3	80.4	83.7	83.9	87
UP	87.3	95.2	81.7	93.5	71.8	85.4	66.1	86.2
Tripura	91.4	94.7	93.9	96.1	62	84	64.2	86
West Bengal	92.4	100	97.1	100	72	78.5	77.5	85.8
Haryana	98.3	93	97.7	95.6	82.6	77.3	84	84.2
J&K	87.8	94.9	86.1	95.4	69.9	80.8	68.4	82.8
Chhattisgarh	88.9	91.8	90.2	94.2	64.7	71.6	74.6	81.6
Nagaland	82	88.8	86	90.6	56.3	76.6	63.5	79.5
Manipur	89	91.6	92.1	92.6	76.1	76	78.9	77.6
Mizoram	88.3	89.6	90.6	91.8	77	74.4	80.5	77.4
MP	91.3	91.8	90.2	92.8	65.7	72.2	66.2	77.3
Sikkim	92.2	90.8	94.8	94.3	65.9	69.8	73.5	77.1
Rajasthan	91.2	84.8	90.8	86.6	78.6	72.6	78	76.9
Gujarat	91.5	96.3	89	95	65.7	73	67.8	76.7
Karnataka	109	99.2	99.3	96.1	73.6	70.7	79.3	76.5
Jharkhand	83.1	89.5	85.7	90.8	61	74.3	63.3	75.7
Arunachal	79.2	87.1	79.9	88.4	42.3	66.7	44.9	70.2
Assam	91.4	82.6	96.7	88.7	62.3	57.4	64.6	63.7
Meghalaya	70.7	77.8	76.5	82.1	43.8	54.6	58.2	61
Bihar	78.6	65	81.1	65.4	51.2	38.8	51.6	40.3
INDIA	91.1	92.7	90.6	93	72.4	77.2	73.5	80.4

• In Bihar, of the 100 girls who started schooling, only 40.3 completed secondary education in 2024 compared to 51.6 of them in 2019

Table 2: The table ranks the States across each column based on the figures given in table 1. For instance, Karnataka was ranked number 1 in the first column as all the 100 boys who started schooling completed upper primary education in 2019

	Upper primary				Secondary			
	Boys		Girls		Boys		Girls	
'19	'24	'19	'24	'19	'24	'19	'24
2	1	1	1	2	1	1	1
3	6	3	5	1	2	2	2
4	1	7	1	8	4	4	2
10	12	12	12	5	3	5	4
14	11	16	10	11	5	11	4
8	9	8	10	3	8	3	6
9	6	11	6	4	6	12	7
11	4	13	1	11	9	10	7
5	5	3	7	6	7	6	9
5	8	5	8	9	11	8	10
16	13	15	9	10	13	8	11
23	14	27	20	18	18	23	12
18	17	15	13	25	12	25	13
12	1	9	1	17	15	17	14
7	13	6	15	6	15	7	15
24	18	24	19	19	14	20	16
22	19	21	19	23	24	16	17
27	23	29	25	27	17	26	18
21	21	17	22	15	10	19	19
23	23	20	23	14	19	13	20
19	19	21	21	22	23	22	21
14	22	14	18	20	26	19	22
26	27	19	28	13	22	16	23
17	12	23	17	21	21	21	24
1	12	2	14	16	25	24	25
26	24	26	24	26	20	27	26
28	28	29	27	30	27	30	27
12	28	10	26	24	28	24	28
30	29	30	29	29	29	28	29
29	30	28	30	28	30	29	30

• In the first column, Meghalaya is ranked last as 30th as of the 100 boys who started schooling, only 78.6 completed upper primary in 2019, the least among all States

குறைந்து பள்ளிப் படிப்பைவிட்டவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மேல்நிலைப்பள்ளி படிப்பை பொறுத்தவரை 2019ல் மாணவர்கள் எண்ணிக்கை 82.6 என்பது 2024ல் 77.3 சதவிகிதமாக குறைந்துவிட்டது.

ராஜஸ்தான் மாநிலத்தில் பள்ளிப் படிப்பை இடையில் விட்டோர்

ராஜஸ்தான் மாநிலத்தில், பள்ளிப் படிப்பைத் தொடங்கிய 100 மாணவர் களில் நடுநிலைப்பள்ளி படிப்பை முடித்தவர்கள் 2019ஆம் ஆண்டில் 91.2 சதவிகிதம் என்பது2024ல் 84.8 சதவிகிதமாகவும்; மாணவிகளைப் பொறுத்தவரை 2019ல் 90.8 சதவிகிதம் என்பது 2024ல் 86.6 சதவிகிதமாகவும் குறைந்து பள்ளிப் படிப்பைவிட்டவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அதேபோல, மேல்நிலைப்பள்ளி படிப்பை பொறுத்தவரை 2019ல் மாணவர்கள் எண்ணிக்கை 78.6 என்பது 2024ல் 72.6 சதவிகிதமாகவும்; மாணவிகள் எண்ணிக்கை 78 சதவிகிதம் என்பது 76.9 சதவிகிதமாகவும் குறைந்துவிட்டது.

பீகார், அசாம், அரியானா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் பள்ளிப் படிப்பை இடையில் விடுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் பள்ளிப் படிப்பில் சேரும் குழந்தைகள் அனைவரும் தொடர்ந்து படிக்க வேண்டும் என்பதற்காகச் செயல்படுத்தி வரும் காலை உணவுத் திட்டம், திறன் மிகு வகுப்பறைகள் திட்டம், இல்லம் தேடி கல்வி திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம், வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கும் திட்டம் மாற்றுத் திறனாளி மாணவர்கள் மீது தனி கவனம் செலுத்தும் திட்டம், முதலிய திட்டங்களால்தான் குழந்தைகள் பள்ளிக் கல்வியில் இடைநிற்றல் இல்லாமல் தொடர்ந்து ஆர்வத்துடன் படிப்பதில்ஊக்கமும் உற்சாகமும் அடைகிறார்கள் என்பது ஒன்றிய அரசின் கல்வி அமைச்சக (UDISE+) ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை! மு.ம.செந்தில்குமார் வரவேற்புரை!

தியாகராயர் நகர் 131-வது வட்டத்தில் விளக்க உரை - நல உதவிகள் வழங்கல்!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – சென்னை அரங்கநாதன் – கே.ஏழுமலை – கோமதி மணிவண்ணன் – எஸ்.பத்மபிரியா பங்கேற்பு!

சென்னை, ஜன.03

தியாகராயர் நகர் கிழக்கு பகுதி, 131-வது வட்டத்தில் திராவிட சூரியன் உதய நாள் - கழக இளைஞரணி செயலாளர் -தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தியாகராயர் நகர் தொகுதியில் அனைத்து வட்டங்களிலும் 'ஏன் வேண்டும் தி.மு.க' எனும் தலைப்பில் விளக்க உரையும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (03.01.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் போஸ் டல் காலனி 4-வது தெருவில் உள்ள மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு தியாகராயர்நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். 131-வது வட்டக் கழக செயலாளர் மு.ம.செந்தில்குமார் வரவேற்புரையாற்றுகிறார். கோ.சு.மணி, கோமதிமணிவண்ணன், மு.மணிவண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வில் சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, தலைமைக் கழக பேச்சாளர் சென்னை அரங்கநாதன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், தியாகராயர் நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை, தியாகராயர் நகர் தொகுதி பார்வையாளர் எஸ்.பத்மபிரியா ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் ம.கி.தோழப்பன், மு.பாலகுமார், எஸ். புஷ்பா, வி.டி.செல்வம், வினோத்கிரிதரன், பீம்குமார், பாரதி, மோகன், பன்னீர்செல்வம், பிரகாஷ், பரமகுரு, சந்தோஷ், பத்மநாபன், மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், மற்றும் கழக முன்னோடிகள் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

மு.ம.மதன்குமார், விக்னேஷ்குமார், சந்தோஷ்குமார் நன்றி கூறுகின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர் பாபு அறிவிப்பின்படி, சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதி 89வது வட்டத்தில், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. (வடக்குப் பகுதிச் செயலாளர்) 7வது மண்டலக் குழுத் தலைவர் பி .கே மூர்த்தி எம்.சி, தெற்குப் பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி. (பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற துணைத் தலைவர் ஆகியோரின்) முன்னிலையில், 89வது வட்டக் கழகச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம். இ.சேகர் தலைமையில் நேற்று (02.01.2025) காலை, வார்டுக்கு உட்பட்ட பாகங்கள், 245 – வது பாகத்தில் உள்ள தெருக்கள், 256 – வது பாகத்தில் உள்ள தெருக்கள், 258– வது பாகம் அவ்வை நகரில் உள்ள தெருக்களில் பொதுமக்களை நேரில் சந்தித்து குறைகளை கேட்டறிந்தனர்.

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில்

உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம் - நல உதவிகள் வழங்கல்!

132 'அ' வட்டச் செயலாளர் கே.எஸ். வெல்டிங்ராஜா அறிக்கை

சென்னை, ஜன. 3 -

தியாகராய நகர் மேற்கு பகுதி 132 அ வட்டத்தில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 'ஏன் வேண்டும் தி.மு.க. தலைப்பில் விளக்க உரை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மயிலை த வேலு எம்.எல்.ஏ., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஜெ கருணாநிதி எம்.எல்.ஏ., சைதை சாதிக், கே.ஏழுமலை, திருமதி எஸ் பத்மபிரியா, பா.கார்த்திகா பாஸ்கர் எம்.சி. ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இது குறித்து வட்ட கழக செயலாளர் கே.எஸ். வெல்டிங் ராஜா விடுத்துள்ள அறிக்கை

நாளை (4-01-2025) மாலை 5 மணி அளவில் அம்பேத்கர் சாலையில் அமைந்துள்ள அன்னை அஞ்சுகம் சமூக நல கூடத்தில் தியாகராய நகர் மேற்கு பகுதி 132 அ வட்டத்தில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு "ஏன் வேண்டும் தி.மு.க." தலைப்பில் விளக்க உரை நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெறுகிறது.

இதில் எஸ் மோகன், கோடம்பாக்கம் மு.சத்யா, கோ.சு.மணி, பா. கார்த்திகா பாஸ்கர் எம்.சி. ந.மோ முரளி, டி. மோசஸ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த. வேலு. எம்.எல்.ஏ, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. தலைமை கழகபேச்சாளர் சைதைசாதிக் தியாகராயநகர் மேற்குபகுதி கழகசெயலாளர் கே.ஏழுமலை எம்.சி., ,திருமதி.எஸ்.பத்மபிரியா, ஆகியோர்சிறப்பு ரையாற்றி நலத்திட்டஉதவிகளை வழங்குகின்றனர்.

எனவே இந்த நிகழ்ச்சியில் 132 "அ" வட்டத்திற்குட்பட்ட செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சுற்றுச்சூழல் அணி,அயலக அணி, வழக்கறிஞர் அணி, ஆதிதிராவிடர் அணி, இலக்கிய அணி, மாணவர் அணி, வர்த்தக அணி, தொண்டர் அணி, சிறுபான்மை அணி, பொறியாளர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, பாக முகவர்களின் அணி, அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தொ.மு.சா தொழிலாளர் தொழில் சங்கம்,கழகத்தின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அனைவரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கே.எஸ். வெல்டிங்ராஜா அறிக்கையில் கூறியுள்ளார்.

கர்நாடகாவில்

அரசு பேருந்து கட்டணம் 15 சதவீதம் உயர்வு!

பெங்களூர்,ஜன.3-

ஜனவரி 5ம் தேதி முதல் அரசு பேருந்து கட்டண உயர்வு அமலுக்கு வரும் எனவும் அறிவிப்பு.

எதிர்க்கட்சியான பாஜக கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. கர்நாடகாவில் அரசு பேருந்துகளின் கட்டணம் 15 சதவீதம் உயர்த்தப் படுகிறது. இதற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

வரும் ஜனவரி 5ம் தேதி முதல் அரசு பேருந்து கட்டண உயர்வு அமலுக்கு வரும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கு எதிர்க்கட்சியான பாஜக கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

போக்குவரத்துக் கழகங்கள் கடும் நிதி நெருக்கடியில் இருப்பதாகவும், அதனால் டிக்கெட் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த சூழலில் பேருந்து கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வி.எஸ்.நேதாஜி ஏற்பாட்டில் - திருவள்ளூர் மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில்

பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் - முதியோர் இல்லங்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. வழங்குகிறார்கள்!

திருவள்ளூர், ஜன. 03

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் வர்த்தக அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரமும், கடம்பத்தூர் எறைமங்கலம் தகுதி உள்ள முதியோர் இல்லங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட அமைப்பாளர் வி.எஸ். நேதாஜி ஏற்பாட்டில் இன்று (03.01.2025 வெள்ளிகிழமை) காலை 10 மணியளவில் நடைபெறுகிறது.

இதில் நகரக் கழக செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன், நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், கடம்பத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மோ.ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்கள் கே.ஏ.மதியழகன் கார்த்திகேயன், கோபி, ஜி.கே. ஹரி, ஆர்.வாசு பி.ஆர்.பிரபாகரன், டி.பால்ராஜ், எஸ். ஜெயவேல், கே.ஜி.ஆர். ராஜேஷ்குமார், கதிரவன், பி.கே.ஜெயசந்திரன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள்.

இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து முதியோர் இல்லங்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாநில நிர்வாகிகள் ஆதிசேசன், ஒ.ஏ. நாகலிங்கம், குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் கே. திராவிட பக்தன், டாக்டர் வி.சி.ஆர். குமரன், ஜெயபாரதி, எம். மிதுன் சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், சுப்பிரமணியம், ராஜேஸ்வரி ரவீந்திரநாத் உள்பட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

முடிவில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் சிவக்குமார், மாவட்ட வர்த்தக அணி துணைத்தலைவர் ரகுநாதன் நன்றி கூறுகிறார்கள்.

2026 சட்டமன்ற தேர்தல் முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு மாவட்ட அமைப்பாளர் ஜி. சித்திக் அலி ஏற்பாட்டில் திண்ணை பிரச்சாரம் ஆர்.கே. பேட்டை கிழக்கு ஒன்றியம் எஸ்.வி.ஜி.புரம் கிராமத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ கலந்துகொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் செய்த சாதனைகளை விளக்கி பொதுமக்களிடம் சிறப்புரையாற்றினார் உடன் ஒன்றிய கழகச் செயலாளர் பழனி, பொதுக்குழு உறுப்பினர் கே.எம். சுப்பிரமணியம், செல்லாத்தூர் சம்பத், சி.எம்.ரவி, நாகப்பன், வீரமங்கலம் மா. ரகு, பிச்சாண்டி, சத்யராஜ், டில்லி, சிரஞ்சீவி, மத்தூர் பன்னீர்செல்வம், கு. அன்பு, சிறுபான்மை அணி நிர்வாகிகள் த. அய்யூப் அலி, முகமது அஸ்லாம், பிரகாஷ் ஞான ஒளி, உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.